2004 ஜூலை 31]

அதைப் பரிவுடன் ஆய்வு செய்யும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 113, திரு. வி.ஆர். ராஜாங்கம், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

113—

பழச்சாறு தொழிற்சாலை

***7689அ–திரு. வி.ஆர். ராஜாங்கம்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அலங்காநல்லூர் ஒன்றியம், முடுவார்பட்டி அருகே பழச்சாறு தொழிற்சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலங்காநல்லூர் ஒன்றியம், முடுவார்பட்டி கிராமம் அருகே பழச்சாறு தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி.ஆர். ராஜாங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் பகுதி என்பது மிகப் பின்தங்கிய பகுதியாகும். அங்கே தொழிற்சாலைகள் எதுவும் கிடையாது. மழை பெய்யாததால் விவசாயமும் பொய்த்து விட்டது. நமது நத்தம் தொகுதியைச் சேர்ந்த அமைச்சர் அவர்கள் தொகுதியும் பக்கத்தில் இருக்கிறது. அங்கேயும் மாம்பழம் அதிகமாக விளைச்சல் உள்ளது. இந்தச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு மறுபரிசீலனை செய்து, அங்கே ஒரு மாம்பழச்சாறு தொழிற்சாலை அமைக்க முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழச்சாறு தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் ஏதும் இல்லையென்று சொன்னாலும், தனியார் தொழில் முனைவோர்கள் யாரேனும் தொழிற்சாலை அமைப்பதற்கு முன்வந்தால், டிட்கோ நிறுவனம் அவர்களுடன் இணைந்து அந்தத்

தொழிற்சாலையை நிறுவுவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி.ஆர். ராஜாங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுத் திட்டத்திற்கு அதிகபட்சமாக டிட்கோ எவ்வளவு நிதியை வழங்கும், தனியார் மூதலீடு எவ்வளவு செய்ய வேண்டும் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். இங்கே எனக்கு முன்னால் அருமை அண்ணன் ஹக்கீம் பேசும்போது அந்த ஏடுகளையெல்லாம் கீழே தள்ளிவிட்டார், மைக்கைப் போடவில்லையென்று சொன்னார். இங்கே எனக்கு முன்னால் பெரிய ஏடுகள் குவிந்திருக்கின்றன. "சர்வர் சுந்தர"த்தில் நாகேஷ் எடுத்துச் செல்வதுபோல, எங்கள் உடம்பைத் தூக்கிக் கொண்டு, இதையும் தூக்கிக் கொண்டு நாங்கள் செல்ல வேண்டிய சூழ்நிலையிருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்கள் கருணைகூர்ந்து, இதை நாங்கள் தங்கியிருக்கின்ற அறைக்குக் கொண்டு வந்து கொடுக்க ஏற்பாடு செய்து தந்தால் உதவியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, பழச்சாற்றை விட்டுவிட்டு எங்கேயோ போய்விட்டீர்கள். (சிரிப்பு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் தொழில் முனைவோர்கள் டிட்கோ நிறுவனத்துடன் சேர்ந்து தொழில் நடத்த வேண்டுமென்று சொன்னால், குறைந்தபட்ச முதலீடு—தொழிலுக்கான முதலீடு—5 கோடி ரூபாய் குறைந்தபட்ச முதலீடு இருக்க வேண்டும். அது கூட்டுத் துறையாக இருந்தால் 26 விழுக்காடுகளும், இணைத் துறையாக இருந்தால் இரண்டு விழுக்காடு முதல் 11 விழுக்காடுகளும், வழிகாட்டுத் துறையின் மூலமாக வந்தால் ஒரு விழுக்காடும் வைத்து டிட்கோ நிறுவனம் முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை ஒவ்வொரு ஒன்றியத்திலும் அறிமுகப்படுத்தியிருக்கின்றார்கள். அந்தத் திட்டத்தின் மூலம் மாண்புமிகு உறுப்பினர் ராஜாங்கம் அவர்களே அவர்களுடைய தொகுதியில் அந்தத் தொழிற்சாலையை அமைப்பதற்கு முன்வந்தால் அரசு அனைத்து முயற்சிகளையும், உதவிகளையும் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2004 ஜூலை 31]

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. ஹக்கீம், என்ன?

திரு. எம்.ஏ. ஹக்கீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் சொல்ல வேண்டும் என்று நினைத்தேன். நிறைய செய்திக் குறிப்புகள் இருக்கின்றன. நான் இரண்டொரு புத்தகங்களைப் பார்த்தேன். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்--விடைகள் நேரம் முடியட்டும். திரு. அன்பழகன்.

திரு. ஆ.கு.சீ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தொழிற்சாலைகள் எல்லாம் அமைவதற்கு முன்னோடி மாநிலமாக நல்லதொரு தரமான அமைப்பை உருவாக்கிய தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியிலே ஒவ்வொரு மாவட்டத்திலும் புதியதொரு பெரிய தொழிற்சாலை அமைக்க ஏதாவது வாய்ப்பு உண்டா? தமிழகத்திலே இதுவரை எத்தனை தொழிற்சாலைகள் சிறப்பாக....(மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுதான் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலே எத்தனையோ வாய்ப்புகள் சொல்லப்பட்டிருக்கின்றன.

திரு. ஆ.கு.சீ. அன்பழகன்: இல்லை, அது ஒரு கோடி ரூபாய் அளவிலே. மேலும், பல்வேறு அதிக முதலீட்டிலே, அதிக வேலைவாய்ப்பை உருவாக்கக்கூடிய தொழிற்சாலைகளை அமைப்பதற்கு வாய்ப்பு இருக்கின்றதா என அறிய விரும்புகிறேன். மேலும், எத்தனை தொழிற்சாலைகள் சிறப்பாக நடைபெறுகின்றன? நலிந்த தொழிற்சாலைகள் எவ்வளவு என அறிய விரும்புகிறேன். பெரணமல்லூர் பகுதியிலே காகிதத் தொழிற்சாலை மற்றும் மாம்பழத் தொழிற்சாலை அமைக்க ஏதாவது திட்டங்கள் இருக்கின்றனவா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லாவற்றுக்கும் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வினா எண் 114, திரு. பி.எஸ். அருள், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.